DINAMALAR-15-JAN-2012



# பொங்கல் திருநாள் கொண்டாடுவோம்

.................... சத்குரு, ஈஷா அறக்கட்டளை ....................

பொங்கல் திருநாள், அறுவடை நாளைக் கொண்டாடும் விதமாக, தமிழ் கலாசாரத்தில் பல நூற்றாண்டுகளாக மிகவும் விமரிசையாகக் கொண்டாடப் படுகிறது. ஒவ்வொரு நாளும் வாழ்வின் வளங்களை நமக்கு கொடுக்கும் இந்த பூமிக்கு நன்றி செலுத்தும் ஒரு ஆழமான உணர்வே இந்த கொண்டாட்டத்திற்கு அடிப்படையாக உள்ளது. நாம் இட்லி அல்லது தோசை என்று எதை உண்கிறோமோ அது பூமியின் ஒரு பகுதிதான், பூமியிலிருந்து வந்ததுதான், இல்லையா? இந்த பூமி, மிகவும் கருணையே உருவான தாயாக இருக்கிறாள். எனவே பொங்கல் திருநாள் என்பது இந்த கருணை நிறைந்த தாயைக் கொண்டாடும் நாள்.

வாழ்வை ஒரு செழிப்பான மற்றும் உற்சாகமான நிலைக்கு கொண்டு வருவதற்கு விழாக்கள் ஒரு கருவியாக இருந்தன. நம் கலாசாரத்தில் ஸ்ரீராமர் வாழ்ந்த காலத்தில் வருடம் 365 நாட்களும் விழாக்கள் நடந்ததாக சொல்கிறார்கள். அப்போது மனிதனுக்குக் கொண்டாட்டம் என்பது ஒரு தனிச் செயலாக இல்லை. செய்யும் செயலையே கொண்டாட்டமாக செய்தான்.

ஒரு திருவிழா என்றால் அந்த நகரத்தில் இருக்கும் அனைவருமே ஓரிடத்தில் ஒன்றாகக் கூடிக் கொண்டாடுவார்கள். காலை 4 மணிக்கே எழுந்து மிகவும் சுறுசுறுப்பாக பல செயல்களைச் செய்வார்கள். அப்படியென்றால் வருடம் முழுவதும் திருவிழாவாக மக்கள் கொண்டாட வேண்டுமென்றால் அவர்களுக்குள் எவ்வளவு துடிப்பு இருந்திருக்க வேண்டும்? தினசரி பண்டிகை கொண்டாடுவதற்கும் அதற்குரிய சடங்குகளை செய்வதற்கும், அந்நாட்களில் மக்களுக்குள் ஏராளமான உற்சாகமும் ஈடுபாடும் இருந்தது. ஒருவருடைய வாழ்க்கை உச்சபட்ச வாய்ப்பில் மலர வேண்டுமென்றால அவருக்கு தான் எதிர்கொள்ளும் எல்லாவற்றின் மீதும் அசைக்க முடியாத ஒரு ஆசை இருக்கவேண்டும். இது ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் ஏற்பட வேண்டிய மிக முக்கியமான ஒரு விஷயம்.

எனவே அக்காலங்களில் திருவிழாக்கள் தொடர்ந்து நடைபெற்று வந்தன. வேறு எந்த ஒரு நாட்டிலோ அல்லது கலாசாரத்திலோ இத்தனை திருவிழாக்கள் இருந்ததாகத் தெரியவில்லை. மற்றக் கலாசாரங்கள் போர், பஞ்சம் போன்றவற்றாலும் பாதிக்கப் பட்டிருந்தன. இந்த ஒரு கலாசாரம் மட்டும்தான் பல ஆயிரம் வருடங்களாக பெரிய இடையூறு இல்லாமல் இருந்து வருகிறது. இது போன்ற சூழ்நிலை நிகழும்போதுதான் வாழ்வின் பிற அம்சங்களில் கவனம் செலுத்த முடியும். இந்த ஒரு நாகரீகத்தில் மட்டுமே ஏழாயிரம், எட்டாயிரம் வருடங்களுக்கு முன்னரே சாக்கடை வசதிகள் உருவாக்கப்பட்டிருந்தன. இவ்விடத்தில் ஆரோக்கியம் இருந்தது. மக்கள் அவர்களுடைய வாழ்க்கையை சிறப்பாகக் கையாண்டனர். கோயில்கள் கட்டினர். மக்களின் வாழ்க்கை ஒரு திருவிழாவாக நடந்ததால்தான் இவையெல்லாம் இங்கு இயல்பாகவே நடந்தது.

இன்று உலை வைக்கிறோம் என்றால் அது ஒரு மாதிரியான விழா. நாளை விதைப்பது என்றால் அது இன்னொரு மாதிரியான விழா. களையெடுக்க இன்னொரு மாதிரியான விழா. இப்படி தாங்கள் செய்யும் ஒவ்வொரு செயலையும் மக்கள் ஆடல் பாடல்களுடன் கொண்டாட்டமாக செய்து வந்தார்கள். ஒவ்வொரு நாளுக்கும் தனித்தனியான பாடல்கள், ஆட்டம் இருந்தன. ஆனால் அந்நிய ஆதிக்கம் இந்த நாட்டிற்கு வந்தவுடன் இந்தக் கொண்டாட்டங்கள் குறைந்து விட்டன.

30, 40 வருடங்கள் முன்பு கூட வருடத்தில் 40, 50 விழாக்கள் இருந்தன. இப்போது கூட கிராமங்களில் ஒரு வருடத்தில் 20, 25 கொண்டாட்டங்கள் நடக்கின்றன. குறைந்தது மாதத்தில் 2 கொண்டாட்டங்களாவது இருக்க வேண்டும் என்பது என் விருப்பம். மனிதன் தற்போது வாழ்க்கை பற்றி கவனம் இல்லாமல், இன்னொரு மனிதனை பற்றின கவனம் இல்லாமல், தன் உயிர்த்தன்மை பற்றி கவனம் இல்லாமல் ஏதோ ஆசையில் தொடர்ந்து கடுமையாக வேலை செய்து கொண்டே இருக்கிறான். வாழ்க்கையில் கொண்டாட்டங்கள் இல்லையென்றால் நம் செயலில் ஒரு உற்சாகம் இருக்காது. ஒரு கட்டத்தில் ஏன் வாழ வேண்டும் என்ற கேள்வி கூட வந்துவிடும். உயிரின் அடிப்படையைக் கூட உணராததால்தான் இது போன்ற கேள்விகள் வருகின்றன.

நம் கலாசாரத்தில் கொண்டாட்டம் என்றால் அனைத்து மக்களும் பலவித ஈடுபாடுகளுடன் இருப்பர். முன்பெல்லாம் கொண்டாட்டம் என்றால் அது வீட்டிற்குள் நடக்கவில்லை. ஊரே சேர்ந்து கொண்டாடும். இப்போதோ கொண்டாட்டம் என்றால் வீட்டிற்குள் நமக்குள்ளேயே சாப்பிட்டுக்கொள்வது, பிறகு டிவி பார்ப்பது என்று ஆகிவிட்டது. வீட்டிலும் நாலு பேரில் இரண்டு பேர் ஏதோ காரணத்தில் அதில் ஈடுபட மாட்டார்கள்.

இந்த உயிருக்கு உற்சாகம் தரும் கொண்டாட்டங்களை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும். இந்தப் பொங்கல் திருவிழா கூட நாலு நாள் கொண்டாடினார்கள். முதல் நாள் போகிப் பண்டிகை. போகி என்றால் பழையதை எரிப்பது. அப்படியென்றால் புதிய துணிமணிகள் எடுப்பது இல்லை. இந்த வருடத்தில் ஏதாவது கர்மாவாக சேர்த்து வைத்திருந்தோம் என்றால் அதை எரித்துவிட்டு ஒரு புதிய ஆரம்பம். ஒரு புதிய வாழ்க்கை. அந்த வாய்ப்புடன் பொங்கல் பண்டிகைள் ஆரம்பிக்கின்றன. அடுத்த நாள் பொங்கல் திருவிழா. பொங்கல் என்றால் நாம் வளர்த்த தானியங்கள் பொங்கி வழிய வேண்டும். அதுதான் நோக்கம். அப்படி நடந்தாலே நம் வாழ்க்கை செம்மையாகத்தானே இருக்கும்?

முன்பெல்லாம் கிராமத்தில் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டால் நன்றாக இருக்கிறீர்களா என்று கூட கேட்க மாட்டார்கள். சாப்பிட்டீர்களா என்றுதான் கேட்பார்கள். சாப்பிட்டு விட்டால் பிறகென்ன பிரச்னை? எனவே தானியங்கள் நமக்கு கிடைக்க உதவி செய்த ஆடு மாடுகளை விட்டுவிட்டு எப்படி விழா கொண்டாடுவது? எனவே, அடுத்த நாள் அவர்களுக்காக மாட்டுப் பொங்கல். அவைகளை கட்டிப்போட்டு விழா கொண்டாட முடியுமா? எனவே அவைகளை முன்னிறுத்தி அவைகளை அலங்காரம் செய்து ஒரு விழா. அடுத்த நாள் சமூகம் ஒன்று சேர்வதற்காக ஒரு விழா. அதுதான் கரிநாள்.

30 வருடங்களுக்கு முன்பு மக்கள் பெருமையாக நினைத்து செய்த வந்தவைகளைக் கூட, தற்போதைய நாகரீகம், பொருளாதாரக் கொள்கைகள், டிவி போன்றவை காரணமாக தற்போது செய்ய வெட்கப்படுகின்றனர்.

30 வருடங்கள் முன்பு உழவர்கள், தாங்களே வறுமையில் இருந்தால்கூட, பொங்கல் திருநாள் அன்று தங்கள் மாடுகளைக் குளிப்பாட்டி, கொம்புகளுக்கு வண்ணம் பூசி, வீதிகளில் அழைத்துவருவர். ஆனால் தற்போது ஒருவர் 5ம் வகுப்பு படித்துவிட்டாலே அத்தகைய செயலை செய்ய வெட்கப்படுகின்றார்.

ஊர் முழுக்க ஒரு இடத்தில் கூடி பொங்கல் வைத்து, ஆடல் பாடல்களுடன் பொங்கல் விழா கொண்டாடியது எல்லாம் தற்போது காணாமல் போய் வருகிறது. எனவே பழைய கலாசாரத்தை நாம் திருப்பிக் கொண்டு வர வேண்டும்.

அதற்கு முன்னோடியாக ஈஷாவில் ஒவ்வொரு வருடமும் 5, 6 விழாக்களாவது வருடத்திற்கொரு முறை கொண்டாட ஆரம்பித்துள்ளோம். சில காலம் கழித்து இந்த கொண்டாட்டங்கள் ஒவ்வொரு கிராமத்திலும் பிறகு தொடர வேண்டும். இப்போதெல்லாம் உங்கள் சினிமா ஹீரோவே ஆடட்டும், பாடட்டும் என விட்டு விட்டீர்கள். உங்கள் வாழ்க்கையிலும் கொஞ்சம் ஆட்டம், பாட்டம், மக்களுடன் கலந்து கொள்ளும் தன்மை வர வேண்டும். இப்படி இருந்தால் நமக்கு நோய் கூட வராது. எந்த மனப் பாதிப்பும் வராது. எனவே அந்தக் கலாசாரத்தை திருப்பிக் கொண்டு வருவதில் நாம் உறுதியுடன் இருக்க வேண்டும்.

இந்தப் பொங்கல் திருநாள் அறுவடைத் திருநாள். நாம் அறுவடை செய்வது எப்போதும் நெல் சோளம் என தானியமாக மட்டும் இருக்கக்கூடாது. எவையெல்லாம் நம் உள்நிலை நல்வாழ்விற்குத் தேவையோ அவற்றையும் நாம் அறுவடை செய்ய வேண்டும். அதை நினைவூட்டுவதாக இந்த நாள் அமையட்டும். அனைவருக்கும் எனது பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.